2022 மார்ச் 23]

சொல்கிற, பாலுசெட்டிசத்திரம், படப்பையில் பார்த்தீர்களென்றால், பால் உற்பத்தி குறைவாக உள்ளதோடு பாலின் தரமும் அங்கு சரியாக இல்லை. பால் இல்லாத காரணத்தால், அங்கு பால் கொள்முதலுக்கு வருவதில்லை. நீங்கள் சொன்னது போன்று, பாலை தனியார்களிடம் கொடுக்கின்ற ஆர்வம், நம்மிடம் கொடுப்பதற்கு வரவில்லை. அது நம்முடைய உற்பத்தியாளர் செய்த தவறுதான். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், மிக விரைவில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டு, மிக விரைவில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின்பேரில் பால் உற்பத்தி அதிகமாகும்போது அங்கு ஒரு சங்கம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. கு. செல்வபெருந்தகை: *நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

வீடுகள் கட்ட அனுமதி வழங்குதல்

***199—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஊழியர்கள் குடியிருக்க வாரியத்தால் வழங்கப்பட்ட இடங்களில் அவர்கள் வீடு கட்டி குடியேற அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், சேலையூர், ராஜகீழ்ப்பாக்கத்தில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான சர்வே எண் 39/1–க்கு உட்பட்ட, 12 ஏக்கர் 80 சென்ட் நிலத்தில் முதல்கட்டமாக 2,400 சதுர அடி வீதம் 120

ஊழியர்களுக்கும், இரண்டாவது கட்டமாக 1,200 சதுர அடி வீதம் 12 ஊழியர்களுக்கும், தரை வாடகையாக மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் 99 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டு, அங்கு ஊழியர்கள் தங்கள் சொந்த நிதி ஆதாரத்தில் வீடுகளைக் கட்டி வசித்து வருகின்றார்கள். அதனைத் தொடர்ந்து, 1,200 சதுர அடி வீதம் மேலும் 13 ஊழியர்களுக்கு 2018 ஆம் ஆண்டு வீட்டுமனை ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் மட்டும்தான் இன்னும் வீடுகள் கட்டாமல் உள்ளார்கள். உடனடியாக வீடு கட்ட சொல்லி வக்ஃப் வாரியம் மூலமாக அவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு மூலமாகவோ, வக்ஃப் வாரியம் மூலமாகவோ வீடு கட்டுகிற திட்டம் இல்லை. இடம் மட்டும்தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இடத்தினை ஒதுக்கீடு செய்து, அவர்களின் சொந்த செலவில் 99 ஆண்டுகள் குத்தகைக்காக, தரை வாடகை மிக, மிகக் குறைவாக 5 ரூபாய் வீதம், சலுகை அடிப்படையில் ஊழியர்களுக்கு மானியத்தோடு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்திலே, இசைமுரசு நாகூர் இ.எம். ஹனிபா அவர்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவராக இருந்த அந்தச் சூழலிலே, காஞ்சிபுரம் மாவட்டம் ராஜகீழ்ப்பாக்கம் பகுதியிலே, வக்ஃப் வாரிய ஊழியர்களுக்காக, வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே வீடு கட்டுவதற்கான மனைகள் நீண்டநாள் குத்தகையிலே அளிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுகுறித்து விரிவாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், தற்போது அங்கு ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டு, அந்தப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான இடம் இது என்று சொல்லி, புதியதாக வக்ஃப் வாரியத்தினால் அதன் ஊழியர்களுக்கு நீண்டகால குத்தகைக்கு அளிக்கக்கூடிய அந்தக் குத்தகைகள் பதிவு செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதை நிவர்த்தி

2022 மார்ச் 23]

செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு அந்த இடத்தினை ஒதுக்கீடு செய்கின்ற நேரத்தில், பொதுவாக ஒரு இடத்தினை தேர்வு செய்து வீட்டுமனைகளுக்காக ஒதுக்கீடு செய்யும்போது, பொதுப் பயன்பாட்டுக்காக இடம் ஒதுக்குவார்கள். அந்தப் பொதுப் பயன்பாட்டுக்காக ஒதுக்கிய இடத்தில்தான் பள்ளிவாசல் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியிலே உள்ளவர்கள், அந்தப் பள்ளிவாசலைப் பயன்படுத்தி வருகின்றார்கள். வக்ஃப் வாரியத்திற்கு சொந்தமான இடம் என்பதால் அங்கே இருக்கின்ற ஊழியர்கள் நேரடியாக வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் பயனடைய வேண்டும் என்பதுதான் நோக்கமே தவிர, வேறு எந்த நோக்கமும் அதில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே இருக்கின்றவர்களுக்கு வேறு எந்தவிதமான அச்சமும் ஏற்படத் தேவையில்லை. 99 ஆண்டுகள் குத்தகையின்கீழ், 5 ரூபாய் தரை வாடகையில் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. மேலும், அங்கே காலியாகவுள்ள இடத்திற்குக்கூட தற்போது பணியாளராக உள்ள 13 பேர் விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களுக்கும் விதிமுறைகளின்படி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடியுங்கள், அவ்வளவுதான். ஐந்து ரூபாய்தான் தரை வாடகை இருக்கிறது.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டிலே ஆக்கிரமிக்கப்பட்ட வக்ஃப் சொத்துக்களை மீட்கக்கூடிய பணியை இந்த அரசு செய்து வருகிறது. அப்படி மீட்கப்படக்கூடிய இடங்களிலே பல்வேறு ஊர்களிலே வக்ஃப் வாரியத்தின் சார்பாக கல்லூரி மாணவ, மாணவிகள் தங்கக்கூடிய, விடுதிகள் கட்டக்கூடிய திட்டம் வக்ஃப் வாரியத்திற்கு இருக்கின்றதா? அதேபோல வக்ஃப் தீர்ப்பாயம் சென்னையில் மட்டும் ஒரு பழமையான கட்டடத்தில் இருக்கின்றது. நல்ல வசதியுடன் அந்தத் தீர்ப்பாயத்திற்கான இடம் அமைக்கப்படுமா? மதுரையிலும் தீர்ப்பாயம் அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களை வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் முதல்வர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 10 மாத காலத்தில்தான், 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் (சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும்) சட்டத்தின்கீழ் மாண்புமிகு தளபதியார் அவர்களின் தலைமையிலான ஆட்சியில், தனியார் ஆக்கிரமிப்பில் இருந்து தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு சொந்தமான 91,432 சதுர அடி அளவிலான 96 வக்ஃப் சொத்துக்கள் வாரியத்தால் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்டுள்ள சொத்துக்களின் மதிப்பு சுமார் 158 கோடி ரூபாய் ஆகும். இதுசம்பந்தமாக மொத்தமுள்ள வழக்குகள் 173, அதில் தீர்வு காணப்பட்டவை 96, நிலுவையில் உள்ள வழக்குகள் 65, மேல்முறையீட்டில் உள்ளவை 12. இதை ஆய்வு செய்து, உடனடியாக அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காகவும், மாவட்ட நீதிமன்றங்களில் மேல்முறையீட்டிற்கு வருகின்ற மேல்முறையீட்டு மனுக்கள் உரிய நேரத்தில் விசாரணைக்கு வருவதில்லை என்பதைக் கருத்தில் கொண்டும் வக்ஃப் வாரிய மேல்முறையீட்டு மனுக்களை விசாரிப்பதற்கு என்றும் தனியாக வக்ஃப் வாரிய தீர்ப்பாயம், காமராசர் சாலையில் சேப்பாக்கம், சென்னை–5 என்ற முகவரியில் நகர்ப்புர வளர்ச்சிக் கழக

2022 மார்ச் 23]

கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. மாமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட இதே கேள்வியை, நான் கடந்த காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் கேட்டேன்; வக்ஃபீப் வாரியத்தில் உறுப்பினராக இருந்த காலத்தில், திருநெல்வேலி போன்ற பகுதிகளில் இருந்து சென்னைக்கு வருவது சிரமமாக இருக்கின்றது; மதுரையில் ஒரு தீர்ப்பாயம் உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அந்த கோரிக்கையைத்தான் உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தி சொல்லி உள்ளார்கள். உண்மையிலேயே அது வரவேற்கக்கூடியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் தனியாக சிறுபான்மையினர் நலனிற்காக ஒரு அலுவலரை நியமிக்கின்ற பொறுப்பினை முதல் கட்டமாக 5 இடங்களுக்கு வழங்கியுள்ளார்கள். நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

உள் விளையாட்டு அரங்கம்

***3267—திரு. கே.எஸ். சரவணக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*